**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 156/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கண்ணதாசன் | க–பெ/ த–பெ | சின்னதம்பி |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 41/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மட்டன் கடை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.08.2026**

-----------------------------------------------------------------------------------------------------

31.08.2026

குறுக்கு விசாரணை

1) ம.சாஆ.5 கணினியில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.5 ல் வங்கியின் முத்திரை இல்லை என்றால் சரிதான். யாரால் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான், வங்கியால் கொடுக்கப்பட்டது. ம.சா.ஆ.5 ற்கு 65 B சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.5 வங்கி கணக்கு தொடங்கும்போது நான் எந்த முகவரியில் வசித்தேன் என்றால் ஆறுமுக நகர் காரைக்குடியில் வசித்தேன். எனது கிராமத்து விலாசத்தை வங்கியில் சமர்பித்தேன். வங்கியில் நகை அடமானம் வைத்து பணம் பெற்றேன் என்றால் சரிதான். தற்போது வரை அடமானம் ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 04.02.2021 தேதியில் அடமானம் வைத்தேன் என்று எந்த ஒரு குறிப்பும் ம.சா.ஆ.5 ல் இல்லை என்றால் சரிதான். எனக்கு ஊரில் விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது. நான் விவசாயம் செய்கிறேனா என்றால் இல்லை, எனது தாய் தந்தை செய்கிறார்கள். 04.02.2021 ல் நகையை வைத்து கடன் பெற்றதாக ம.சா.ஆ.5 ல் இல்லை என்றாலும், agri கடன்தான் பெற்றதாக உள்ளது என்றாலும், சரிதான், வட்டி குறைவு என்பதால் நகைகளை வைத்து Agri கடன் பெற்றேன். நகைகளை அடமானம் வைத்திருந்தால் அடமானம் என்றுதான் வங்கி பரிவர்த்தனையில் குறிப்பிட்டு இருக்கும் என்றாலும், நகைகளை அடமானம் வைக்காகததால்தான் Agri லோன் என்று மட்டும்

குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல.

2) ம.சா.ஆ.6 புரோநோட்டில் எழுதியதும் சாட்சியுமான இடத்தில் விவேகானந்தன் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான், அவரை எதிரிதான் அழைத்து வந்தார். விவேகானந்தன் புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்பதை எனது புகார் மற்றும் பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விவேகானந்தனை சாட்சியாக விசாரிக்க தற்போது வரை எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். விவேகானந்தனை சாட்சியாக விசாரத்தால் வழக்கின் உண்மை தன்மை தெரியவரும் என்பதால் அவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.31 18:14:42 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.